DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -36

| | | |
|---|---|---|
| Name | : திரு. கலியமூர்த்தி | Caste: |
| Father's Name: | திரு. முத்தான் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 30th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8, A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**30.01.2024.**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடையார்பாளையம் தாலுக்கா, கோடாரிகருப்பூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் உடையார்பாளையம் தாலுக்கா, குண்டவெளி கிழக்கு கிராமநிர்வாக அலுவலரின் உதவியாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். குண்டவெளி கிழக்கு கிராம அதிகார எல்லைக்குள் தான் மீன்சுருட்டி காவல்நிலையம் அமைந்துள்ளது.

கடந்த 03.06.2008 அன்று நானும், எனது கிராமநிர்வாக அலுவரான சாமிநாதனும் எங்களது அலுவலகத்தில் இருந்தோம். அப்போது காலை 10.30 மணிக்கு மீன்சுருட்டி காவல்நிலையத்திலிருந்து ஒரு காவலர் எங்களது அலுவலகத்திற்கு வந்தார். அவர் எங்களிடம் ஆய்வாளர் எங்களை காவல்நிலையத்திற்கு அழைப்பதாக சொன்னார். எங்களது அலுவலகத்திலிருந்து மீன்சுருட்டி காவல்நிலையம் ஒருபர்லாங்

தொலைவில் உள்ளது. எனவே நாங்கள் நடந்தே காவல்நிலையம் சென்றோம். அங்கு காவல் ஆய்வாளர் இருந்தார். மேலும் காவல்நிலையத்தில் வங்குடி கிராமத்தை சேர்ந்த 10 பேர் கும்பலாக இருந்தார்கள். காவல் ஆய்வாளர் எங்களிடம் வங்குடியில் நடந்த கொலை வழக்கு சம்மந்தமாக எங்களை சாட்சியாக போட்டிருப்பதாகவும், அதற்காக சாட்சி கையொப்பம் செய்யும்படியும் சொன்னார்.

அதன்பேரில் கிராமநிர்வாக அலுவலர் முதல் சாட்சியாகவும், அதற்கு கீழே நான் இரண்டாவது சாட்சியாகவும் ஏற்கனவே எழுதிவைக்கப்பட்டிருந்த 6 ஸ்டேட்மெண்டுகளில் நாங்கள் கையொப்பம் செய்தோம். பின்னர் நாங்கள் எங்கள் அலுவலகத்திற்கு திரும்பிவிட்டோம். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ரவிசந்திரன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். இரண்டாவது சாட்சியாக வி.ஏ.ஓ சாமிநாதன் கையொப்பம் செய்திருக்கிறார்.

என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் சக்திவேல் மகன் ரமேஷ் என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். முதலாவது சாட்சியாக வி.ஏ.ஓ சாமிநாதன் கையொப்பம் செய்திருக்கிறார்.

என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் சிலம்பரசன் என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். முதலாவது சாட்சியாக வி.ஏ.ஓ சாமிநாதன் கையொப்பம் செய்திருக்கிறார். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ரவிசந்திரன், சக்திவேல் மகன் ரமேஷ் மற்றும் சிலம்பரசன் ஆகியோரிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதற்காக தயார் செய்ததாக சொல்லப்படும் 3 கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது தான். அவற்றில் முதலாவது சாட்சியாக வி.ஏ.ஓ சாமிநாதன் கையொப்பம் செய்திருக்கிறார்.

மேற்படி ஆவணங்களிலுள்ள எனது கையொப்பங்கள் மட்டும் முறையே அ.சா.ஆ.40 முதல் அ.சா.ஆ.45 வரை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றாலும், அந்த விசாரணையில் நான் மீன்சுருட்டி காவல்நிலைய கு.எண்.130/2008 குற்ற வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் சரணடைந்திருந்த எதிரிகள் ரவிசந்திரன், சக்திவேல் மகன் ரமேஷ், சிலம்பரசன் ஆகியோர்களை மீன்சுருட்டி காவல் ஆய்வாளர் 02.06.2008 தேதியன்று போலிஸ் காவலில் எடுத்ததாகவும், 03.06.2008 அன்று மேற்படி எதிரிகளை ஆய்வாளர் என் முன்பாகவும், வி.ஏ.ஓ.சாமிநாதன் முன்பாகவும் விசாரித்ததாகவும், அந்த சமயத்தில் எதிரி ரவிசந்திரன் என்பவரது ஒப்புதல் வாக்குமூலமானது மேற்படி ஆய்வாளரால் காலை 7.00 மணி முதல் 8.00 மணி வரை பதிவு செய்யப்பட்டதாகவும், எதிரி சக்திவேல் மகன் ரமேஷ் என்பவரது ஒப்புதல் வாக்குமூலம் காலை 8.30 மணி முதல் 9.30 மணிவரை பதிவு செய்யப்பட்டதாகவும், எதிரி சிலம்பரசன் என்பவரது ஒப்புதல் வாக்குமூலம் காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரை பதிவு செய்யப்பட்டதாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலங்களில் நானும், வி.ஏ.ஓ.சாமிநாதனும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

போலிசார் விசாரணையில் நான் மேற்படி எதிரிகள் மூவரும் தங்களது ஒப்புதல் வாக்குமூலத்தில் தாங்கள் கொலைசெய்ய பயன்படுத்திய ஆயுதத்தை வங்குடி ரைஸ்மில்லின் பின்புறமுள்ள சவுக்குதோப்பில் மறைத்து வைத்திருப்பதாகவும், தங்களை அழைத்து சென்றால் மறைத்து வைத்திருக்கும் ஆயுதங்களை எடுத்து ஆஜர்படுத்துவதாக சொன்னதாகவும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

போலிசார் விசாரணையில் நான் ஆய்வாளர் எங்களையும், மேற்படி எதிரிகளையும் அழைத்து கொண்டு வங்குடி ரைஸ்மில்லின் பின்புறம் சென்று பிற்பகல் 12.00 மணிக்கு ரவிசந்திரன் ஆஜர்படுத்திய ரத்தகறையுடன் கூடிய கத்தியை கைப்பற்றியதாகவும், எதிரி ரமேஷ் எடுத்து ஆஜர்படுத்திய ரத்தக்கரைபடிந்த கத்தியை 12.15 மணிக்கு கைப்பற்றியதாகவும், எதிரி சிலம்பரசன் ஆஜர்படுத்திய ரத்தக்கரை படிந்த கத்தியை

12.30 மணிக்கு கைப்பற்றியதாகவும், அதற்காக ஆய்வாளர் தயாரித்த தனித்தனியான மகஜர்களில் நானும், வி.ஏ.ஓ சாமிநாதனும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் போலிசார் விசாரணையில் உண்மையான சங்கதிகளை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வி.ஏ.ஓ. சாமிநாதன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக காலமாகிவிட்டார்.

**அனைத்து எதிரிகள் தரப்பிலும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.